**செய்தி வெளியீடு எண்: 818** **நாள்:29.10.2020**

**<u>செய்தி வெளியீடு</u>**

## "தமிழ்நாடு:தொழில் துறையில் முதன்மை மாநிலம்"

தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் ஒரு முன்னோடி மாநிலமாக திகழ்வதோடு முதலீட்டை ஈர்ப்பதையும், வேலைவாய்ப்பை உருவாக்குவதையும், தொழில்துறை உற்பத்தியை அதிகரிப்பதையும், தென் மாவட்டங்களுக்கு சிறப்பு கவனம் செலுத்தி உரிய தொழிற்திறனை கொணர்தலையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

தமிழகத்தை ஒரு வணிக மையமாக்குவதற்காக, மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் மாண்புமிகு துணைத் தலைவர், திரு சி. பொன்னையன் அவர்களின் தலைமையில், வரவிருக்கும் தமிழ்நாடு புதிய தொழிற்கொள்கை குறித்த வல்லுநர் ஆலோசனைக் கூட்டம் **29.10.2010** அன்று காலை **11.00** மணிக்கு மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் மனித வள மேம்பாட்டு காணொளி அரங்கத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் உறுப்பினர் செயலர் (மு.கூ.பொ.) முனைவர் அதுல் ஆனந்த், இ.ஆ.ப. அவர்கள், திட்டம் மற்றும் வளர்ச்சி துறையின் கூடுதல் தலைமை செயலாளர், திருமதி ஜெயஸ்ரீ ரகுநந்தன், இ.ஆ.ப., அவர்கள், தொழில் துறையின் அரசு முதன்மைச் செயலர் திரு என். முருகானந்தம், இ.ஆ.ப., அவர்கள், சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் துறையின் முதன்மை செயலாளர், திரு கே. கோபால் இ.ஆ.ப., அவர்கள், தொழில் துறையின் அரசு சிறப்பு செயலர் திரு வி. அருண் ராய், இ.ஆ.ப. அவர்கள், அரசு துறைசார்ந்த உயர் அலுவலர்கள், பல்வேறு வர்த்தக சபை சார்ந்த தொழில் வல்லுநர்கள் மற்றும் மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவைச் சார்ந்த குழுமத் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் உறுப்பினர் செயலர் (மு.கூ.பொ.) அவர்கள் இக்கருத்தாய்வின் முக்கியத்துவம் குறித்தும் மற்றும் தமிழ்நாடு பொருளாதார வளர்ச்சியில் இரண்டாம் இடத்தில் உள்ள மாநிலம்எனவும்குறிப்பிட்டார்.

தமிழக அரசு, வேலைவாய்ப்பை உருவாக்குவதற்காக உலகளாவிய அளவில் பெரும் முதலீட்டுடன் கூடிய புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டுள்ளது எனவும் கூறியுள்ளார்.

இக்கூட்டத்தில், திரு என். முருகானந்தம், இ.ஆ.ப., அவர்கள், வரவிருக்கும் தமிழகத்தின் புதிய தொழிற் கொள்கையைப் பற்றிய விளக்கம் அளித்தார். மேலும், இதுவரை நடைபெற்ற இரண்டு உலக முதலீட்டாளர் மாநாட்டின் காரணமாக தமிழகம் அதிக அந்நிய முதலீட்டை ஈர்த்துள்ளது என்று தெரிவித்தார்.

மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் மாண்புமிகு துணைத் தலைவர், திரு சி. பொன்னையன் அவர்கள், தொழில் துறையின் வளர்ச்சிக்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து வாழ்த்துக்களை தெரிவித்தார். பொருளாதார மறுமலர்ச்சிக்கான உத்திகளை உருவாக்கவும், பொருளாதார வளர்ச்சிக்கான முதலீட்டை மேற்கொள்ள ஒற்றை சாளர முறையின் வாயிலாக உதவிடவும், தொழில் துறை மற்றும் சேவைத் துறைக்கான பிற நடவடிக்கைகளுக்காகவும், பாராட்டினார்.

மேலும், தொழில்நுட்ப கல்வி வளர்ச்சிக்காக மாண்புமிகு முன்னாள் முதல்வர் திரு M.G. இராமச்சந்திரன் அவர்கள் மேற்கொண்ட உன்னத நடவடிக்கையினை நினைவு கூர்ந்தார். தொழில்நுட்ப கல்வி முடித்து வரும் மாணவர்களுக்கான தொழில் திறனை பெருக்கி, சுய வேலைவாய்ப்பை உருவாக்கி பொருளாதாரம் மற்றும் வேலைவாய்ப்பு பெருக வழி வகை செய்ய ஆலோசனை வழங்கினார். சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் துறை மூலம் வேளாண் சார்பு தொழில், சந்தை வாய்ப்பு, அதனைச் சார்ந்த சுய உதவிக் குழுக்களுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து கிராம பொருளாதார மேம்பாட்டிற்கு வழி வகுத்து இத்துறையில் தமிழகத்தை முன் உதாரணமான மாநிலமாக உயர்த்த வேண்டும் என வலியுறுத்தினார். குறைந்த செலவிலான சூரிய சக்தி தொழில்நுட்பம் கொண்டு உற்பத்தித் துறை மேம்படுத்த வேண்டும் என ஆலோசனை கூறினார்.

மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் மாண்புமிகு துணைத் தலைவர், திரு சி. பொன்னையன் அவர்கள் தமிழகத்தின் புதிய தொழில்

கொள்கை மாநிலத்தை உலகளாவிய வணிக மையமாக மாற்றும் என்றார். மேலும், உற்பத்தி மற்றும் சேவைத் துறை கட்டமைப்பு, வளர்ந்து வரும் துறைகள், வேலைவாய்ப்பை பெருக்குதல் மற்றும் தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் நிறைவான வளர்ச்சி ஆகியவற்றில் சிறப்பு கவனம் செலுத்துவதன் மூலம் கோவிட் – 19 இன் தாக்கத்தினால் ஏற்பட்ட பொருளதார மந்த நிலையிலிருந்து தமிழகத்தை மீட்டு, வலியதாக்கி, தமிழகத்தை முதன்மையான மாநிலமாக்கும் எனக் கூறினார்.

உறுப்பினர் செயலர்,
மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**